**Spl.CC.No.80/2019**

**20-11-2020** ஆம் தேதி அன்று சாட்சி **P.W.13** நாச்சியப்பன் மீண்டும் மனுவின் பேரில் **(CMP.No. 628/2020)** மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டுஎதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

**29.11.2011** ஆம் தேதியில் நான் ஈரோடு மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவில் துணை காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வந்தேனா என்றால், இல்லை. நான் அந்த தேதியில் தர்மபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காண்ப்புப் பிரிவில் பணிபுரிந்து வந்தேன். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரிக்கும்போது **21.7.2010** ஆம் தேதியிலிருந்து ஈரோடுமாவட்டம், ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவில் காவல் துணைக் கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன் என நான் தெரிவித்து இருக்கிறேனா என்றால் நான் அவ்வாறு தெரிவிக்கவில்லை. நான் எப்போதாவது ஈரோடு மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவில் பணிபுரிந்து இருக்கிறேனா என்றால் ஈரோடு மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவில் நான் பணிபுரிந்து வரவில்லை. நான் தர்மபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவில் பணிபுரிந்து வந்த போது எனக்கு உயர் அதிகாரி யார் என்றால் மேற்கு சரக காவல் கண்காணிப்பாளர் ஆவார். மேற்கு சரக காவல் கண்காணிப்பாளரின் அலுவலகம் எங்கு அமைந்துள்ளது என்றால் சென்னையில் உள்ளது. மேற்கு சரக காவல் கண்காணிப்பாளர் இவ்வழக்கு தொடர்பாக எனக்கு எழுத்துவழி உத்திரவு ஏதும் பிறப்பித்தாரா என்றால் இல்லை, வாய்மொழியாக உத்திரவு பிறப்பித்தார். வாய்மொழி உத்திரவின்படிதான் இவ்வழக்கில் நான் கூடுதல் காவல் கண்காணிப்பாளரிடம் அறிக்கை செய்கிறேன் என கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திருமதி சண்முகபிரியா அவர்களிடம் தெரிவித்தேனா என்றால், ஆம் தெரிவித்தேன். மேற்கு சரக காவல் கண்காணிப்பாளரின் உத்திரவின்படி நான் இவ்வழக்கிற்கு துணைபுரிய முன்னிலையாகியுள்ளதாக கூடுதல் காவல் கண்காணிப்பாளரிடம் எழுத்து பூர்வமாக ஏதும் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை, அவ்வாறு கொடுக்கும் வழக்கம் இல்லை. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை வாங்கினேனா என்றால், வாங்கிப்படித்துப் பார்த்தேன். இவ்வழக்கின் குற்றவாளியென யாரது பெயர் பதிவு செய்யப்பட்டிருந்தது என்றால் முதல் தகவல் அறிக்கையில் திருவாளர் பொங்கலூர் பழனிசாமி என பதிவு செய்யப்பட்டிருந்தது. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திருமதி

சண்முகபிரியா அவர்களை நான் சந்திக்கும்போது அங்கு யார், யார் இருந்தார்கள் என்றால், அவரது காவல் ஆய்வாளர் திரு.ஜெரால் அலெக்சாண்டர், விசாரணைக்கு உதவியாக அழைக்கப்பட்டிருந்த சாட்சிகளான திரு.தியாகு, திருமதி சோபனா ஆகியோர்கள் இருந்தார்கள். அங்கீகாரக் கடிதத்தில் **(Ex.P.13)** திருவாளர் பொங்கலூர் பழனிசாமி மீது பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கு சம்மந்தமாக திரு பாலன் என்பவரது வீட்டை சோதனை செய்து திரு.பொங்கலூர் பழனிசாமி அவர் தொடர்பான ஆவணங்கள் அல்லது சான்று பொருட்கள் இருந்தால் கைப்பற்றும்படி அங்கீகாரக் கடிதத்தில் சொல்லப்பட்டிருந்தது. **Ex.P.13** ஆவணத்தில் திரு பாலன் அவரது முழு முகவரியும் சொல்லப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். அந்த முகவரியை திரு பாலன் என்பவரது வீட்டை யார் அடையாளம் காண்பித்தார்கள் என்றால் ஆய்வாளர் திரு ஜெரால்டு அலெக்சாண்டர் அடையாளம் காண்பித்தார். மேற்படி பாலன் அவர்களது வீடு அமைந்துள்ள இடம் குடியிருப்பு வீடுகள் சூழ்ந்த பகுதி என்றால் சரிதான். சோதனை செய்யப்படுவதற்கு முன்பாக சோதனை செய்யப்படவுள்ள வீடு அமைந்துள்ள பகுதியில் வசித்துவரும் மதிப்புமிக்க நபர்களை சாட்சியாக இருக்கும்பொருட்டு அழைத்தேனா என்றால், அழைக்கவில்லை. சோதனைக்கு அழைத்துச் சென்ற சாட்சிகளே மதிப்புமிக்க சாட்சிகள் என்பதால் வேறு மதிப்புமிக்க சாட்சிகளை அழைக்கவில்லை. சோதனைக்கு என்னுடன் வந்த மற்ற சாட்சிகளை கூடுதல் காவல் கண்காணிப்பாளரே தேர்வு செய்து வைத்திருந்தார் என்றாலும், நான் அந்த சாட்சிகளை தேர்வு செய்யவில்லை என்றாலும் சரிதான். சோதனையின்போது என்னுடன் இருந்த சாட்சிகள் அரசு பணியில் பணிபுரிந்து வந்த அரசு ஊழியர்கள் என்றால் சரிதான். சோதனையின்போது எனது அலுவலகத்தில் ஆய்வாளர் ஜி.வி.கிருஷ்ணராஜன் மற்றும் எனது அலுவலகத்தின் காவலர் ஒருவரும் சோதனையின்போது என்னுடன் இருந்தார்கள். சோதனை செய்த வீட்டின் அமைப்பு குறித்து வரைபடம் ஏதும் தயார் செய்தேனா என்றால், வரைபடம் தயார் செய்யவில்லை. பார்வை மகசர் தயார் செய்தேனா என்றால் நான் தயார் செய்த மகசரிலேயே அந்த இடத்தைப் பற்றி குறிப்பிட்டு இருந்ததால் தனியாக பார்வை மகசர் என நான் தயார் செய்யவில்லை. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திருமதி சண்முகபிரியா அவர்கள் என்னை விசாரிக்கும்போது சோதனை சாபிதா மற்றும் பார்வை மகசர் தயார் செய்ததாக குறிப்பிட்டுச் சொல்லியுள்ளேன் என்றால், அவ்வாறு நான் சொல்லவில்லை. சோதனையின்போது **67**

ஆவணங்கள் கைப்பற்றப்பட்ட சோதனை சாபிதாவில் குறிப்பிட்டுள்ளேன். அதில் திரு பொங்கலூர் பழனிசாமி சம்மந்தப்பட்ட ஆவணம் இருந்ததாக என்னால் சொல்ல முடியுமா என்றால் அதை முடிவு செய்வதற்காக கூடுதல் காவல் கண்காணிப்பாளரிடம் அந்த ஆவணங்களை ஒப்படைத்துவிட்டேன். நான் சோதனையின்பொழுது சோதனைக்குட்பட்ட வீட்டின் உரிமையாளர் பாலன் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் இருந்தன. அவற்றைக் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றப்பட்ட ஆவணங்களுக்கும் திரு பொங்கலூர் பழனிசாமிக்கும் என்ன தொடர்பு என்பதை புலனாய்வு அதிகாரிதான் முடிவு செய்வார். திரு.பாலன் அவர்கள் வீட்டில் இருந்த அனைத்து ஆவணங்களையும் நான் கைப்பற்றி எடுத்து வந்தேனா என்றால், இல்லை, திரு பாலன் சம்மந்தப்பட்ட **67** ஆவணங்கள் மட்டும்தான் நான் கைப்பற்றினேன். பாலன் சம்மந்தப்பட்ட ஆவணங்களை மட்டும்தான் நான் கைப்பற்றினேனா என்றால், திரு பாலன் அவர்களால் விளக்கம் கூறமுடியாத சில ஆவணங்களையும் நான் கைப்பற்றினேன். எந்த, எந்த ஆவணங்கள் குறித்து திரு பாலன் அவர்களால் விளக்கம் அளிக்க இயலவில்லை என்றால் அந்த விவரம் எனக்கு தற்பொழுது நினைவில் இல்லை. சொத்து சம்மந்தப்பட்ட ஆவணங்களை மட்டும்தான் நான் கைப்பற்றினேனா என்றால் இல்லை. சொத்து சம்மந்தப்பட்ட ஆவணங்களோடு பணம் சம்மந்தப்பட்ட ரசீதுகள், வங்கி கணக்குப் புத்தகங்கள், கிரிடிட் கார்டுகள் போன்ற ஆவணங்களை கைப்பற்றினேன். கிரிடிட் கார்டுகளை திரு பாலன் கேட்டதற்கிணங்க அவரிடமே திருப்பிக் கொடுத்துவிட்டேன். கைப்பற்றப்பட்ட ஆவணங்களில் திரு பொங்கலூர் பழனிசாமிக்கு பணம் கைமாறியதாக ஏதேனும் ஆவணங்கள் இருந்ததா என்றால், அவ்வாறு தெரியவில்லை. அது புலன் விசாரணையில்தான் தெரியவரும். கைப்பற்றப்பட்ட ஆவணங்களில் சில ஆவணங்கள் அசல் ஆவணங்கள் ஆகும். சில ஆவணங்கள் ஒளி நகல்கள் ஆகும். **Ex.P.13** படி திரு பாலன் அவர்களின் வீட்டை சோதனை செய்யவில்லை என்றாலும், அவரது வீட்டில் **67** ஆவணங்கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. **Ex.P.14** சோதனை சாபிதாவை திரு பாலன் அவர்களின் வீட்டில் வைத்து தயார் செய்ததாகச் சொல்வதும், சாட்சிகளிடம் சாட்சி கையெழுத்து பெற்றதாகச் சொல்வதும், ஆவணங்களை கைப்பற்றி புலனாய்வு அதிகாரியிடம் ஒப்படைத்ததாகச் சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி சோதனை நடைபெறவில்லை என்றால் சரியல்ல. **Ex.P.13** மற்றும் **Ex.P.14** ஆவணங்கள் கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால்,

**Ex.P.13** சோதனை செய்ய கொடுக்கப்பட்ட அங்கீகாரக்கடிதம் ஆகும். அது கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்தார்கள். **Ex.P.14** சோதனை சாபிதாவை நான் சோதனை செய்த இடத்திலேயே தயார் செய்தேன். **Ex.P. 14** ஆவணத்தை கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. **29.11.2011** ஆம் தேதி நான் தர்மபுரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவில் துணை காவல் கண்காணிப்பாளராக பணியில் இருந்து, இவ்வழக்கில் சோதனைக்காக கோவை வந்து சோதனை மேற்கொண்டதாக முதல் விசாரணையில் நான் சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. அரசு சாட்சிகளான தியாகு, சோபனா ஆகியோர்கள் என்னுடன் சோதனை செய்ய உடன் வந்தார்கள் என்று நான் சொல்வதும் பொய் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்/நாச்சியப்பன்